## செயற் பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., கட்டட கட்டுமான கோட்டம் எண்.1, சேப்பாக்கம், சென்னை.5 அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை:- பொறி. க.ஆயிரத்தரசு இராசசேகரன், எம்.டெக்., எம்.பி.ஏ.,
செயற்பொறியாளர் (மு.கூ/பொ), பொ.ப.து.,

**செ.மு.ஆ.எண். க3 / 126-2 / 2019 / நாள். 04 .11.2019**

பொருள்: பணியமைப்பு – பொபது., – த.நா.அ.ப.தொகுதி – திரு. P.G.பிரசாந்த், இளநிலை உதவியாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக பணி நியமனம் – பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவக்கி ஆணை வழங்குதல்.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண். 1150 / PSD-H2 / 2019 / நாள். 18.02.2019.
2. முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்3(3) / 25366 / 2019 / நாள். 25.02.2019.
3. இவ்வலுவலக செ.மு. ஆணை எண்.க3 / 126 / 2019 / நாள். 08.03.2019.

------------

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற 2015 – 2016, 2016 - 2017 மற்றும் 2017 – 2018 -ம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி –IV -ன் வாயிலாக தெரிவு செய்யப்பட்டு, பார்வை (2) மற்றும் (3)ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, இளநிலை உதவியாளராக இவ்வலுவலகத்திற்கு பணியமர்வு செய்யப்பட்ட திரு. P.G.பிரசாந்த் அவர்களின் பணியினை இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 08.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை பணியாளர் விதி பொது விதி 23 (அ) (i )ன் படி, இவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான 08.03.2019 முற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவர் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை மூன்று ஆண்டு தொடர் பணியில் முடிக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் இந்த தகுதிகாண் பருவகாலத்திற்குள் பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அரசு அலுவலருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

4/11/19

செயற் பொறியாளர் (மு.கூ/பொ), பொபது.,
கட்டட கட்டுமான கோட்டம்-1,
சேப்பாக்கம், சென்னை-5.

4/11/19

4/11/19

**பெறுநர்:-** திரு. P.G.பிரசாந்த்,
இளநிலை உதவியாளர்,
கட்டட கட்டுமான கோட்டம்- 1,
சேப்பாக்கம், சென்னை 5.